22-7-1991

## ஆனையிறவு மோதல்; ராணுவம் மீது கண்டனம்

(மணிலா)
இலங்கையின் வடபகுதியிலுள்ள ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தொடர்ந்து தமது முற்றுகையின் கீழ் வைத்திருப்பது குறித்து கொழும்புப் பத்திரிகைகள் இராணுவ உயர் பீடத்தைக் கடுமையாகச்சாடி

[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஆடி 6 | இதழ்: 161
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 22-7-1991

## தாக்குதல் தீவிரம்
### படையினர் பலர் பலி

(கொழும்பு)
ஆனையிறவு முகாம் மீதான புலிகளின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளதையடுத்து இராணுவ தரப்பில் பலர் உயிரிழந்துள்ளதாகவும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தரப்பிலி

(4ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த சிப்பாய்களை மீட்க அரசு முயற்சி

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் படுகாயமடைந்த நிலையிலிருக்கும் படையினரை மீட்க பொது ஸ்தாபனங்களின் உதவியை அரசு நாடியுள்ளதாகத் தெரியவருகிறது.

முகாமுக்குள் தற்போது 60-க்கும் மேற்பட்ட படை

[4-ம் பக்கம் பார்க்க]

கட்டைக்காடு அதிரடித் தாக்குதலில்

# நூற்றுக்கணக்கான ராணுவம் புலிகளின் பிடிக்குள் இறுகியது!

(யாழ்ப்பாணம்)
கட்டைக்காடு - வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய படையினர் புல்லாவெளிச்சந்தியில் நிலைகொண்டிருந்த போது நேற்று மாலை புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் நூற்றுக்கணக்கான படையினர் பிரிக்கப்பட்டு புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டு கடும் தாக்குதலுக்கு இலக்காகி வருகிறார்கள்.

நேற்று மாலை 5மணியளவில் இடம்பெற்ற இத்திடீர் அதிரடித் தாக்குதலில் ஒரு கவச வாகனம் தகர்க்கப்பட்டதுடன் பெருமளவு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இரு படையினரின் சடலங்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி- கட்டைக்காடு பகுதியில் இறக்கப்பட்ட படையினர் மருதடிச்சந்தியூடாக புல்லாவெளிச் சந்திக்கு வந்து நிலைகொண்டிருந்

[4-ம் பக்கம் பார்க்க]

## சடலங்கள், ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
புல்லாவெளிச் சந்தியில் நிலைகொண்டுள்ள படையினர் மீது நேற்றும், நேற்றுமுன்தினமும் மேற்கொள்ளப்பட்ட

(4 ம் பக்கம் பார்க்க)

## அதிர்ச்சித் தாக்குதல்

(கொழும்பு)
கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியிலிருந்து ஆனையிறவு நோக்கி முன்னேற முயலும் இராணுவத்தினரை

(4ம் பக்கம் பார்க்க)

## வீர வேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த 6 போராளிகளின் புகழுடம்புகள் நேற்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் நிலைகுலைந்தது

(யாழ்ப்பாணம்)
மன்னார் வங்காலை இராணுவ முகாமிலிருந்து படையினர் வெளியேறி முன்னேறிச்செல்ல முயன்றபோது விடுதலைப் புலிகளுக்கும்-படையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் எதிர்த்

(4-ம் பக்கம் பார்க்க)

## மணல்ஆறு மோதலில் 15 ராணுவத்தினர் பலி

(யாழ்ப்பாணம்)
மணல் ஆறு பகுதியில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை இடம்பெற்ற கடும் மோதலில் 15 படையினர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்.

மணல் ஆறு பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை விமானப்படையின் உதவியுடன் முன்னேறி வந்த போது புலிகள் வழிமறித்து கடும் தாக்குதலைத் தொடுத்தனர். படையினருக்கு ஏற்பட்ட பலத்த

(4-ம் பக்கம் பார்க்க)

## கொமாண்டோ பொலிஸ் கிழக்கிற்கு விரைவு

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்திற்கு பெரும் தொகையான அதிரடிப்படை பொலிஸ் பிரிவினர் அனுப்பப்பட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத்திற்கு பதிலாக கடமையாற்றவே இந்தப் படைப்பிரிவு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் கடமையாற்றிய இராணுவத்தினர்வடபகுதிக்கு அனுப்பட்டுள்ளதாலே இப்பிரிவினர் பெருந்தொகையாக கிழக்கு நோக்கி அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கருத்துக் கூற ஜே. ஆர். மறுப்பு!

(புதுடில்லி)
இலங்கையில் வடக்கு கிழக்கு நிலைமையை பிரேமதாஸா அரசு கையாளும்விதம் குறித்து முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கருத்து எதுவும் கூற மறுத்துவிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐந்து படைப் பிரிவுகளுடன் புலிகள் கடும் சமர்!

(கொழும்பு)
வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ; யாழ். மாவட்டத்தளபதி பிரிகேடியர் விஜயவிமலரத்ன ஆகியோரின் தலைமையில் கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப்பகுதியில் ஐந்து இராணுவ படைப்பிரிவுகள் விடுதலைப் புலிகளுடன் மோதி வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

ஆனையிறவை மீட்கும் இறுதிப் போரில் இப்படைப்பிரிவுகள் விடுதலைப்புலிகளின் கடும் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுதந்திரக் கட்சி பிளவுபடும்?

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் பிளவு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஒன்று தற்போது உருவாகிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைமைப்பீட பதவிக்கு ஏற்பட்டிருக்கும் போட்டி நிலைமையே இந்த

(4ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தர பரீட்சை அனுமதி அட்டை தபாலில்

(கொழும்பு)
அடுத்த மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள ஒரு லட்சத்து 57 ஆயிரம் பரீட்சார்த்திகளுக்கும் அனுமதிஅட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி ஆரம்பமாகும் இப்பரீட்சை 27-ம் திகதி வரை 1,260 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

## லண்டன்தமிழ்நேசன்ஆசிரியர் சிவநாயகம் சென்னையில் கைது

(சென்னை)
லண்டனிலிருந்து மாதமிரு தடவை வெளிவரும் 'தமிழ் நேசன்' ஆங்கில பத்திரிகையின் ஆசிரியர் சிவநாயகம் சென்னையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் இருந்த கு

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புதிய மீரா நாவல்

கதையில் கருத்தில் கன்னித் தமிழ் உரையாடல்களில்சிறந்த பத்து நெஞ்சைத் தொடும் ''மீரா நாவல்கள்'' விற்பனையாகின்றன. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னுகம், திருக்கணிதம் சாவகச்சேரி, மொடேர்ன் நெல்லியடி, கலைச்சோலை வல்வெட்டித்துறை, பிக்பென்ஸ் B) கிளிநொச்சி. யாழ்ப்பாணத்தில் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

[சி-5011]

## அரச சேவை வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

மாகாண அரசாங்கசேவை வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன,

இவ்வெற்றிடங்களை நிரப்ப அரசாங்க நிர்வாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பானசுற்றுநிருபம் சகல மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## எழுதுவினைஞர், சிற்றூழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன

(உடுவில்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் உள்ள எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள் போன்றோரின் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டிய ஆட்களை திரட்டுவதற்கு வசதியாக வெற்றிட விபரங்கள் கோட்டரீதியாக சேகரிக்கப்பட்டுவருகின்றன.

ஒவ்வொரு கோட்டக் கல்வி அலுவலகங்களும் தமது எல்லைக்குள் உள்ள பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள எழுதுவினைஞர்கள், சிற்றூழியர்கள், தொழிலாளி, காவலாளி, சுகாதாரதொழிலாளி, ஆய்வு கூட அலுவலர்கள், சமயற்காரர், தோட்டத் தொழிலாளிகள் போன்றோரின் தேவைகளையும் வெற்றிடங்களையும் விபரமாக திரட்டி தமக்கு அனுப்பி வைக்க வேண்டுமென யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளர் பணித்துள்ளார். ஏற்கெனவே இப்பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற அல்லது இடமாற்றம் பெற்று சென்றதனால் ஏற்பட்ட வெற்றிடங்கள் பற்றிய விபரங்களையும் பாடசாலை ரீதியாக தரும்படியும் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரிகளை கேட்டுள்ளார்.

இவ்வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்பட உள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [109]

## 1997 குடும்பம் இடம் பெயர்வு

[யாழ்ப்பாணம்]

வடமராச்சி கிழக்கிலுள்ள மருதங்கேணியில் இராணுவ நடவடிக்கையினுல் 1997 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. (152)

## சகல பாடசாலைகளிலும் உணவு உற்பத்தி செய்யுமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

சகல பாடசாலைகளிலும் உணவு உற்பத்தி மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; பாடசாலைகளில் உணவு உற்பத்தி வளத்தை உச்சமாக பயன்படுத்த உழைக்கவேண்டும். வீட்டுத்தோட்டங்களிலும் கூட போஷாக்கு தரக்கூடிய பயிர்வகைகளை மேற்கொள்வதினுல் உணவு பற்ருக்குறை நீக்கப்படுவதோடு போஷாக்கு குறைபாடு தன்மையையும் நீக்கமுடியும்.

சூழலைப் பாதுகாப்பதற்கு மரநடுகையையும் மேற்கொள்ளுதல் விரும்பத்தக்கது வேம்பு வாகை, பலா போன்ற மரங்களை பாடசாலைகளில் நடுவதனுல் எதிர்காலத்தில் பாடசாலைக்குத் தேவையான மரத்தளபாடங்கள் தயாரிப்பதற்கு உதவியாக இருக்கும் என்ருர். (152)

## முதலுதவி நிலையம்

[கொழும்புத்துறை]

இருபாலையில் சென் ஜோன்ஸ் அன்புலன்ஸ் முதலுதவிநிலையம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பகுதி அத்தியட்சகர் திரு. க. சங்கரலிங்கம், செல்வி பத்மா ஆகியோரினுல் விளக்கேற்றி திறந்துவைக்கப்பட்டது. (154)

## ஹெலி ரொக்கட் தாக்குதல் வீடுகள் எரிந்து சாம்பர்

[வடமராட்சி]

வதிரியில் நேற்றுமுன்தினம் நண்பகல் ஹெலியிலிருந்து எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஒரு வீடு எரிந்ததுடன், ஆடு ஒன்று இறந்தது. பெண் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

வதிரி ஒல்லியோடை அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள எஸ். கணபதிப்பிள்ளை என்பவரது வீட்டை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதலில் வீட்டு அறை உணவுப் பொருட்களுடன் முற்ருக எரிந்து சாம்பரானதுடன் கட்டிவைக்கப்பட்ட ஆடு ஒன்று பலியானது. வீட்டுக்காரரின் மனைவி திருமதி கணபதிப்பிள்ளை மீனுட்சியம்மா (வயது-65) படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார். (51)

## 'தமிழ்பாடநூல்களில் தமிழ்மொழி சிறப்பு, தொன்மை முறையாக விளக்கப்படவில்லை'

[உடுவில்]

''திருக்குறள் ஒரு மொழி வெறியைத் தூண்டும் நூல் அல்ல. அந்த நூலில் ஓர் இடத்தில்கூட தமிழ் பற்றிய சொல் வரவில்லை. உலகில் உள்ள வேற்று மொழியாளர்கள் எல்லாம் திருக்குறளை தத்தம் மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்து பயன்படுத்துகின்றனர். ஆனுல் தமிழ் மொழியில் எழுதப்பட்ட திருக்குறள் தமிழ் மாணவர்களுக்கு போதிய அளவில் கற்றுக்கொடுக்க முயலாது இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது''

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினுர்.

திரு பேபி சுப்பிரமணியம் மேலும் பேசியதாவது; பாடசாலைகளில் மாணவர்கள் திருக்குறளின் முழுமையான நற்பலன்களை பெற வழிவகுக்கப்படவேண்டும். இதற்காக மூன்ரும் வகுப்பில் இருந்தே தொடர்ச்சியாக ஒவ்வோர் ஆண்டும் பயிலக்கூடிய முறையில் பாடத்திட்டம் அமைக்கப்படவேண்டும். தமிழர்களின் மேன்மைகளை -மாட்சிமைகளை விளக்குகின்ற சங்க இலக்கியங்கள், தூய தமிழ் சொற்கள் அடங்கிய இலக்கியங்கள், பாடல்கள் ஆகியனவும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

இன்றைய பாடத்திட்டங்களில் தமிழ் மொழிக்கான பாடநூல்களில் தமிழ்மொழியின் சிறப்புக்கள், தொன்மைகள் முறையாக எடுத்து விளக்கப்படவில்லை.

சிங்கள இனத்தின் உண்மைக்குப் புறம்பான வரலாறுகளும், பௌத்த மத கருத்துக்களும் வலிந்து திணிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் மாற்றியமைக்கப்பட்டு தமிழ் மக்கள் தமது மொழியின் சிறப்பையும் வரலாற்று உண்மைகளையும் உணரக்கூடியதான பாடத் திட்டங்கள் அமைக்கப்படுவதும் போதனைகள் மேற்கொள்ளப்படுவதும் இன்றைய தேவைகளாகும். [109]

## பீரங்கித் தாக்குதலில்' ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயம்; ஒருவர் பலி

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காட்டைச் சேர்ந்த ஜோன்சன் பெனடிக்கும் அவரது குடும்பத்தினரும் காயங்களுடன் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 14-ம் திகதி இப்பகுதியில் நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் இவரது மூத்த புதல்வனுன பிரபு என்பவர் பலியானுர்.

இவரது மனைவி ஜெயந்தி, சகோதரி வசந்தா, இளைய மகன் ஆகியோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [152]

## சிறுவர் பாடசாலை

(பருத்தித்துறை)

யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தான தரும பரிபாலனசபை, புற்றளை இளைஞர்கழகம், சனசமூகநிலையம்என்பன இணைந்து புற்றளைச்சித்திவிநாயகர் மடாலயத்தில் சிறுவர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது

இச்சிறுவர் பாடசாலைக்கு தேவையான தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்களைக் கல்வித்திணைக்களம் வழங்கியுள்ளது. இங்கு கல்வி பயிலும் சிறுவர்களுக்கு சத்துணவுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இச்சிறுவர் பாடசாலையில் 30 சிறுவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். (52)

## ஒத்திவைப்பு

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த ஆங்கில தினவிழாவும் பரிசளிப்பு வைபவமும் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

## ஆனையிறவு வெற்றிக்காக ஆலயங்களில் ஆராதனை

(உடுவில்)

மறைந்த வீரவேங்கைகளின் ஆத்ம சாந்திக்காகவும், ஆனையிறவு முகாம் தாக்குதலில் தமிழீழப் போராளிகளின் வெற்றிக்காகவும் வேண்டி சுன்னுகம்சிவபூதராஜர்ஆலயத்தில் சுன்னுகம் சிற்றூரவையினரின் ஆதரவில் விசேடபூசை வழிபாடுகள் நடைபெற்றன.

★

உடுவில் கலைமதி சனசமூக நிலைய ஆதரவில் உடுவில் கற்பொக்கணைப் பிள்ளையார் ஆலயத்தில் ஆனையிறவு போர் வெற்றிக்காகவும், மாவீரர்களின் ஆத்ம சாந்திக்காகவும் விசேட பிரார்த்தனைகளும், சிறப்புரைகளும் இடம்பெற்றன.

கலைமதி சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவதத்தில் பிரம்மஸ்ரீ வை. யோகீஸ்வரன் ஐயர், உடுவில் பிரதேச அபிவிருத்தி சபை அதிகாரி திரு. இ. கணேஸ்வரன், திரு. சாம்பசிவம், கந்தரோடை சிற்றூரவைத் தலைவர் திரு. த. நடராசா, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை துணை அதிபர் திரு. வி. பரிபூரணுநந்தசர்மா உட்பட பலர் உரையாற்றினர். (109)

## வெற்றிவேண்டி சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த வீரவேங்கைகளின் ஆத்மசாந்திக்கும், ஆனையிறவு முகாமை வென்றெடுப்பதற்காகவும் போராளிகளின் கரங்களுக்கு வலுவூட்டி ஆத்மபலம்வேண்டியும் கந்தர்மடம் ஆத்திசூடி சித்திவிநாயர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை விசேட சங்காபிஷேகமும் பொங்கலும் நடைபெறவுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி: தெல்லிப்பழைப் பிரிவு மூன்றும்முறை முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவு தொடர்ந்தும் மூன்ருவது முறையாக முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் ஆண்களுக்கான நிகழ்ச்சிகளில் மொத்தம் 11 இடங்களைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தினையும், பெண்களுக்கான போட்டிகளில் மொத்தம் 22 இடங்களைப் பெற்று முதலாம் இடத்தினையும் தெல்லிபபழை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பெற்றுக்கொண்டது.

இவ்வருடத்தின் யாழ். மாவட்ட, விளையாட்டுக்களுக்கான சகல துறை வெற்றியாளர்களுக்குரிய சுழல் கேடயத்தையும், தெல்லிப்பழை உதவிஅரசாங்கஅதிபர் பிரிவே சுவீகரித்துக்கொண்டது.

இம்முறை தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 3 புதிய சாதனைகளையும் நிலை நாட்டியுள்ளது.

1985-ம் ஆண்டு 400 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் 70-02 செக்கன்களாக இருந்த சாதனையை செல்வி ச. தில்லானு சுமங்கல்யா 67-27 செக்கனில் ஓடி முறியடித்துள்ளார். 1990-ம் ஆண்டு முப்பாய்ச்சல் நிகழ்ச்சியில் 9-70 மீற்றர் தூரமாக இருந்த சாதனையை செல்வி வி. விமலினி 9-84 மீற்றர் தூரம் தாண்டியும், 1990-ம் ஆண்டு குண்டெறிதல் நிகழ்ச்சியில் 7-87 மீற்றர் தூரமாக இருந்த சாதனையை செல்வி த. சந்திரமதி 7-92 மீற்றர் தூரம்எறிந்தும் புதியமாவட்ட ரீதியான சாதனைகளை நிலை நாட்டியுள்ளார்கள். (வி)

## விசேட வழிபாடு

(கொழும்புத்துறை)

ஆனையிறவுஇராணுவமுகாம் தகர்ப்பிற்கான மாபெரும் யுத்தத்தில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட தமிழீழ வீரவேங்கைகளின் ஆத்ம சாந்திக்காகவும் காயமடைந்த போராளிகள் பூரண சுகம்பெற வேண்டியும், களத்தில்நின்று போராடும் வேங்கைகளுக்கு ஆத்மபலம் வேண்டியும்விசேட பூசை வழிபாடுகள் கடந்த வியாழக்கிழமை காலை ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தில் நடாத்தப்பட்டது. (154)

## 123 தபால் பொதிகள் பருத்தித்துறையில் தேக்கம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்துக்கு 'மேர்ச்குமாரி' கப்பலில் எடுத்துவரப்பட்ட 123 தபால் பொதிகள் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் பருத்தித்துறை தபாலகத்தில் தேங்கிக்கிடக்கின்றன.

இப்பொதிகளை செஞ்சிலுவைச் சங்கம்மூலம் எடுத்துவந்து மக்களுக்கு விநியோகம் செய்வது சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் இன்று 22ம் திகதி திங்கட்கிழமைகாலை கூடி ஆராயப்பட இருப்பதால் சகல சிற்றூழியர் உட்பட அனைத்து ஊழியர்களையும் தவருது சமுகம் தரும்படி யாழ். மாவட்ட பிரதம தபால் அத்தியட்சகர் கேட்டுள்ளார். (154)

## தையல் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சி மேற்கு ப.நோ. கூ. சங்கத்தினுல் இலவச தையல்பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# "வீட்டுக்கு ஒருவர் முன்வந்து போரில் பங்குபற்றவேண்டும்"

## அரசியல் பொறுப்பாளர் ராஜன் பேட்டி

(யாழ்ப்பாணம்)

''வீட்டுக்கு ஒருவரேனும் முன்வந்து இன்றைய யுத்தத்தில்பங்குபற்ற வேண்டும்'' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் தெரிவித்தார்.

புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

திரு. ராஜன் மேலும் அப்பேட்டியில் தெரிவிக்கையில் கூறியதாவது: ''எமதுமக்களைப் பொறுத்தவரையில் இன்றைய யுத்தத்தைப்புரிந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குகிறுர்கள்.



தங்களுடைய பிள்ளைகள் களத்தில் நின்று போராடுகின்றுர்கள் அவர்கள் இந்த யுத்தத்தில் வெல்லவேண்டும் என்ற உணர்வுகளை மக்கள் ஆங்காங்கே வெளிக்காட்டுகிறுர்கள் போராளிகள் வீரமரணமடைந்தால் கண்ணீர் விட்டு அழுவதுடன் அஞ்சலி நிகழ்ச்சிகளில் பெருமளவில் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்துகிறுர்கள்.

எத்தனை அழிவுகள் வந்தாலும் எங்கள் பிள்ளைகள் தங்கள் இலட்சியத்தில் வென்றே தீரவேண்டும் என்ற ஆதங்கத்துடன் மக்கள்ஒவ்வொருவரும் செயற்பட்டுவருவதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது

முப்பது வயதுக்கு மேற்பட்ட அனைவரும் எமது துணைப் படையில் சேரவேண்டும்என்று எதிர்பார்க்கிறோம்.

யுத்தத்திலே நாம் பல வீரர்களை இழந்துவிட்டோம். பல வீரர்கள் காயப்பட்டுள்ளனர். இந்த வேளையில் எமது ஆயுதங்கள் பல பாசறைகளில் இருக்கின்றன. அந்த ஆயுதங்களைத் தூக்குபவதற்கு வீட்டுக்கு ஒரு இளைஞரோ, யுவதியோ முன்வந்து அந்த ஆயுதங்களைத் தூக்கிப் போராட முன்வர வேண்டும்.''

## அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு முகாமில் தொடர்ந்து நடைபெற்றுவரும் மோதல்களில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர் கண்ணீர் அஞ்சலிகளை செலுத்தி வருகின்றனர். (150)

# போற்றி மதிக்கப்படும் தலைவர் பிரபாகரன்

[நியூயோர்க்]

''புலிகள் இயக்கத்தின் வலிமைக்கும் அதன் சிறப்பிற்கும் உரியவர் தலைவர் பிரபாகரனே.'' இவ்வாறு விடுதலைப் புலிகள் பற்றி ஜுலை 1-ம்திகதி வெளியான அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ் வீக்கில்' எழுதப்பட்டுள்ள கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அச்சஞ்சிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'37 வயது கொண்ட வே. பிரபாகரனின் அமைதியும் அவர் தமது சகாக்களுக்கு விதிக்கும் ஒழுக்கக் கட்டுப்பாடும் அவர் போற்றி மதிக்கும் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

''ஒரு சாதாரண மனிதனின் திடகாத்திரமே விடுதலைப் புலிகளின் வெற்றிக்கு அடிகோலுகிறது'' என்று புலிகள் பிரமுகர் திரு. பாலகுமார் ஒரு தடவை குறிப்பிட்டுள்ளார்.

''சிங்களவரின் கொடுமைகட்கும் பாரபட்சத்திற்கும் ஆட்பட்ட தமிழர்கள் புலிகளின் நேர்மையுடன் ஒத்து இணைந்து தற்போது செயற்படுகின்றனர்.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கம் உலகின் மிகப்பெரும் கண்டிப்பானதும், ஒழுக்க நெறியுடையதுமான அமைப்பென்றும் 'நியூஸ் வீக்' தெரிவித்துள்ளது.

இச்சஞ்சிகைக்கு பேட்டியளித்துள்ள 'புரன்ட்லைன்' ஆசிரியர் திரு என். ராம் கூறுகையில்; விடுதலைப் புலிகளைப்போல் உலகில் எவருமே இல்லை. அவர்கள் தமது அமைப்பிற்காக முற்றுகத் தம்மைத் தியாகம் செய்யக்கூடியவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

[பூ-சி]

# பொருளாதாரத் தடையின் வெற்றியில் பனை வெல்லம்

பொருளாதாரத் தடை மேற்கொள்ளப்படும் வேளையில் சீனித்தேவையை பனை வெல்லம், பனம்சீனி போன்ற சுதேச உற்பத்திப் பொருட்களே நிவர்த்தி செய்கின்றன. இம்முயற்சி திட்டமிட்ட ரீதியில் நசுக்கும்முகமாக சிங்கள அரசு இடையிடையே பொருளாதாரத் தடையை நீக்குகின்றது.

இவ்வேளையில் எமது பிரதேசத்துக்குள் கொண்டுவரப்படும் கரும்புச்சீனி சந்தைகளில் தாராளமாகக் காணப்படும் நிலை உருவாகும்போது பழக்கவழக்கம் காரணமாக மக்கள் கரும்புச்சீனியிலே கவனம் செலுத்துகிறுர்கள், இந்நிலையில் சந்தையில் பனைவெல்லம் தேக்கம் அடைந்து பழுதாகும் நிலைமை உருவாகின்றது.

பனைவெல்லத்தை பயன்படுத்துவதன்மூலம் பின்வரும் நன்மைகளைப் பெறமுடியும்.

1. கரும்புச் சீனியைவிட பனை வெல்லமானது புரதம், இரும்பு, கல்சியம், பொஸ்பரஸ், உயிர்ச்சத்து பீ, உயிர்ச்சத்து சீ போன்ற ஊட்டச் சத்துக்களைக் கொண்டுள்ளது.

2. பனைவெல்லம் ஒப்பீட்டளவில் விலை அதிகமாகவுள்ள போதிலும் கரும்புச் சீனியின் பாவனையுடன் ஒப்பிடும்போது நிறையளவில் தேநீருக்கு 1/3 பங்கு பனை வெல்லம் போதுமாயுள்ளது. 3 கிலோ கருப்பம் சீனியின் இனிப்புத் தன்மை 1 கிலோ பனை வெல்லத்தில் காணப்படுகின்றது.

3. பொருளாதாரத் தடையினுல் பாதிப்படையாது தொடர்ச்சியாகப் பெறக்கூடிதாய் உள்ளது.

4. எமது பணம் தென்னிலங்கைக்கு செல்வது தவிர்க்கப்படுகின்றது அதனுல் எமது பிரதேசத்தில் நாணயப் புழக்கம் அதிகரிக்கின்றது.

5. தொழிலாளர், தொழிற்சாலைகள் அதிகரிப்பதால் எமது மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது

6. சுயசார்வுப் பொருளாதாரம் வளர்ச்சியடைகின்றது

எனவே இறக்குமதியாக்கும் கருப்பம் சீனியை நிராகரித்து பனை வெல்லம், பனம்சீனி போன்றவற்றை உடயோகிக்க அனைத்து மக்களும் முன்வர வேண்டும்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்

# 'தமிழீழம் மலர்வது உண்மை; மக்கள் பங்களிப்பு வேண்டும்'

## அருண் மாஸ்டர் கோரிக்கை

[வட்டுக்கோட்டை]

''தமிழீழம் மலர்வது உண்மை இது எப்பொழுதோ முடிந்த முடிவாகிவிட்டது உலகமே பிரமிக்கத்தக்க சாதனைகளை நிலைநாட்டிவரும் போராளிகளுக்கு தமிழ்மக்கள் அனைவரும் பல வழிகளிலும் பங்களிப்பு செய்ய வேண்டுடும்'' என்று அருண் மாஸ்டர் தெரிவித்தார்.

யாழ். கல்வித்திணைக்களத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட முகாமைத்துவப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இரண்டாம்தர அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போதே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கல்வி நிர்வாகப் பொறுப்பாளர் அருண்மாஸ்டர்தெரிவித்தார்.

முகாமைத்துவக் கல்வி அதிகாரி நா. தணிகாசலம் பிள்ளை தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

அருண்மாஸ்டர் தொடர்ந்து உரைநிகழ்த்தும் போது கூறியதாவது: ''மக்கள் மத்தியில் இருந்துதான் எமது இயக்கங்கள் எல்லாம் தோன்றின. ஆனல் சில இயக்கங்கள் தமிழ் மண்ணில் கால் வைக்க முடியாது போய்விட்டதற்கு காரணம் அந்த இயக்கங்களின் பிழையான செயற்பாடுகளேயாகும். அதரவு கொடுத்த மக்கள் அந்த இயக்கங்களைத் தூக்கி எறிந்து எமது விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரித்திருக்கிறுர்களென்றுல் தலைவரின் சக்தி எத்தகையது என்பதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை.

முகாமைத்துவப் பயிற்சி பெற்ற முதலாம் தர அதிபர்களே ஒரு பாடசாலையை நிர்வகிக்க முடியாது கஷ்டப்படும் இவ்வேளையில் பெற்ற தாய், தகப்பனை மறந்து உயிரை அர்ப்பணித்து போருக்குத் தாமாகவே விரும்பி இளைஞர்கள், யுவதிகளெல்லாம் படையெடுத்து வரக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது என்றுல் எமது தலைவரின் முகாமைத்துவம் எத்தகையது என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மலரப்போகும் தமிழீழம் இப்படி இருக்கிறது என வேற்று நாட்டவர்கள் ஆச்சரியப்படக்கூடிய வகையில் பாராட்டக்கூடிய சிறப்பு மிக்கதாக அமையவேண்டும் மலரும் தமிழீழத்தில் குற்றச்செயல்கள், சாதிவேறுபாடுகள் உயர்வு தாழ்வுகள், மதவேறுபாடு ள், சீதனக்கொடுமைகள் இருக்காத வகையிலேயே நிர்வாகம் இருக்கும் சகலரும் சமத்துவமாக வாழும்காலம் வந்தே தீரும்'

பெற்ற தாயை விட்டுவிட்டு வெளியே ஓடியவர்கள் இங்கு வந்து அந்த நாட்டுக் கலாச்சாரத்தைப் புகுத்தாத வகையில் இங்குள்ளவர்கள் தமிழ் மண்ணைக் காத்துக் கொள்ள வேண்டும்.

நாம் ஆயுதம் எடுத்தது விடுதலைக்காகவே தவிர நிர்வாகத்தை நடாத்துவதற்காகவல்ல என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்றுர்.

யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் எஸ். முத்துக்குமாரசாமி, முகாமைத்துவ விரிவுரையாளர் எஸ். சிவகுமாரன், யாழ். கல்வித்திணைக்களக்கணக்காளர் இ. சுகுணதீரன் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர். [139]

## இராசி பலன்

22-07-1991

திங்கட்கிழமை

ஏகாதசி பி.ப. 4-44 வரை, அனுஷம் பி.ப. 3-45 வரை, மரணயோகம் இராகுகாலம் காலை 7-31 முதல் 9-01வரை, சுபநேரம் மாலை 3-45 முதல் 4-45 வரை.

மேடம்: அமைதியற்ற போக்கு, ஆளடிமை, தொழில் கஷ்டம்.

இடபம்: மனக்களிப்பு, பொதுத்துறைப் பங்களிப்பு, பண வரவு.

மிதுனம்: வெற்றிவாய்ப்பு, குடும்ப சுகம், பெண் உதவி.

கடகம்: சஞ்சலம், காரிய தாமதம், குடும்பக் கஷ்டம்.

சிங்கம்: ஏமாற்றம், தனிமைப்போக்கு, யோசனைமிகுதி.

கன்னி: கற்பனை மிகுதி, இனசன வரவு, சுபகாரியம்.

துலாம்: வயிற்றில் ரோகம், குடும்பபகை, அலைச்சல்.

விருச்சிகம்: வீடா முயற்சி, மனத்தெளிவு, மகிழ்ச்சி.

தனுசு: மனிதநேயம், குடும்பக்கலகம், அதிக செலவு,

மகரம்; நண்பர் உதவி, தொழில் சிறப்பு, பயணம்.

கும்பம்: தெய்வ தரிசனம், சுபச்செய்தி, கல்வி மேன்மை.

மீனம்: தவறுன செய்கை, குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவு, கடன்படல்.

: ஜோஸ்யர்

# போராடும் புலிகளுக்கு உதவுமாறு சுற்றுநிருபம்

[யாழ்ப்பாணம்]

''வடமாகாண தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் அந்நியப் படையுடன் போராடிவரும் வேங்கைகளுக்கு உதவிகள் வழங்க முன்வர வேண்டும்''.

இவ்வாறு வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் கி. சிவநேசன் சகல தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும், முகாமையாளர்களுக்கும் அனுப்பிவைத்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: எமது நிறுவனங்களின் சுற்றுடலில் துக்கத்தை நினைவுகூரும் வகையில் அலங்கரிப்பதுடன் காயத்தோடு இருக்கும் எமது தியாக சீலர்களுக்கு பொருள்உதவி, உடல் உதவி அத்தோடு அவர்கள் இருக்கும் இடம்தேடிச்சென்று சேவைசெய்ய முன்வரவேண்டும் என்றுர். (152)

# யாழ்.மாவட்டத்தில்மலேரியா தடுப்பு வேலைகள் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் மீண்டும் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் குடிசனம் நெருக்கமாக உள்ள இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மலேரியாத் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த ஊழியர்களால் அகதிமுகாம்கள் இருக்கும் இடங்களிலும், குடிசனம் நெருக்கமாக உள்ள குருநகர் போன்ற சில பகுதிகளுக்குச் சென்று மலேரியா நோய்த் தடுப்பு மருந்துகளான 'குளோரோகுயின்', 'பிறுமாகுயின்' ஆகிய குளிசைகளையும் விநியோகிப்பதுடன் சில இடங்களில் மலேரியா தடுப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் சில கிராமங்களுக்கு இம் மருந்துகள் விநியோகிக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

# கம்பன்விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மாதம் 24ம் திகதி முதல் 28ம் திகதிவரை நல்லை ஆதீனத்தில் நடைபெறவிருந்த அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன்விழா மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

# தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

[சென்னை]

தமிழக மீனவர்கள் இந்திய இலங்கை கடல் பிராந்தியத்தின் சர்வதேச எல்லைக்கு முன் 5 கிலோ மீற்றர் தொலைவு வரை மீன்பிடிக்க விதித்திருந்த தடையை சில நிபந்தனைகளின் அடிப்படையில் நீக்குவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது''.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப்போராளிகளின் நடவடிக்கையை கட்டுப்படுத்து முகமாகதமிழக மீனவர்களின் நலன்கருதியுமேமேற்படி தடை சட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் ஆயினும் மீனவர்கள் சங்கங்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து மேற்படிதடையுத்தரவு நீக்கப்படுவதாகவும் ஏனினும் எப்பொழுது முதல் மீன்பிடிப்பதற்கான தடை நீக்க உத்தரவு அமுல்படுத்தப் படுமென்பது பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (க)

## சமுகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போர்க்காலத்தில் சேவை செய்யவிரும்பும் சகல ஆசிரியர்களும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட செயலகத்திற்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். [153]

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகத் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் சகல சனசமூக நிலைய தலைவர்கள், செயலாளர்கள் யாவரையும் இன்று காலை 11 மணிக்கு கோண்டாவிலிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட செயலகத்திற்கு வருகைதருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். [153]

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் மாதர் அபிவிருத்தி சங்கத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை இன்று பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவிலுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட செயலகத்திற்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (153)

0 0 0

இன்று சமுகம் கொடுக்க முடியாதவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை குறிப்பிட்ட நேர அட்டவணையின்படி சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். [153]

0 0 0

(யாழ்ப்பாணம்)

போர்க்கால சேவை செய்ய விரும்பும் கடின உழைப்பாளர்கள் உடனடியாக தொடர்பு கொண்டு ஒத்துழைக்குமாறு விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி வேண்டுகோள்விடுத்துள்ளது. கிராமிய வட்டஅவை, பிரிவு ஊடாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் மண்வெட்டி பிக்கான், சணல்கயிறு, ஊசி, வெற்றுச்சாக்குகள், வெற்று உரப்பைகள், முட்டை பெருமளவில் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (153)

## ஈழத் தமிழரை பிடிக்க தமிழகத்தில் தேடுதல்

[சென்னை]

தமிழகத்தில் பதிவுசெய்யப்படாமல் முகாம்களுக்கு வெளியே இருக்கும் ஈழத்தமிழர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முகாம்களுக்கு வெளியே இருக்கும் ஈழத் தமிழர்கள் பொலிஸ் நிலையங்களில் கடந்த 19ந் திகதிக்கு முன் பதிவுசெய்யுமாறு தமிழக அரசினால் கேட்கப்பட்டிருந்தனர்.

பதிவு செய்வதற்கான காலக்கெடு முடிவடைந்தமையால் இன்னமும் பதிவுசெய்யப்படாமலிருப்பவர்களைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக மாநில அரசுப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் இத்தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

அரசின் வேண்டுகோளையடுத்து இதுவரையும் 28,000 ஈழத்தமிழர்கள் மட்டும் பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

சென்னையில் பத்தாயிரத்துக்குமதிகமான ஈழத்தமிழர்கள் வாழ்கின்றபோதிலும் ஐயாயிரம்பேர் மட்டுமே பதிவு செய்துள்ளனர்.

இத்தேடுதல் நடவடிக்கையில் 65 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 2000 பேர் கைது

(சென்னை)

இதுவரை பதிவுசெய்து கொள்ளாத இரண்டாயிரம் இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் 100 பேரும், செங்கை அண்ணா கிழக்கு மாவட்டத்தில் சுமார் 200 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கமாண்டோ படையினர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நித்திகைகுளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் நான்கு சிறிலங்கா கமாண்டோ படையினர் கொல்லப்பட்டார்கள், அத்துடன் சிறிலங்கா விசேட அதிரடிப்படை வீரர் ஒருவரும் இதில் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [மா]

### லண்டன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாசன் என்ற இலங்கைத் தமிழரும் வேறு மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திரு சிவநாயகத்திடம் இருந்து பதினூராயிரம் ரூபா ரொக்கமும் முன்னூறு அமெரிக்க டொலர்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டது.

உரிய கடவுச்சீட்டு மற்றும் பயண ஆவணங்கள் இன்றி இவர்கள் சென்னையில் தங்கியிருந்தமையினாலேயே கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக சென்னை நீதிமன்றத்தில் பொலிஸாரால் வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## தமிழக கடலோரத்தில் 15 அணிகள் ரோந்து

(சென்னை)

தமிழக கடலோரப் பகுதியில் மத்திய றிசேர்வ் பொலிஸ் படையின் 15 அணிகள் ரோந்துப்பணிகளில் ஈடுபடவுள்ளன.

51 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட படையில் தற்பொழுது ஒரு லட்சத்து 60 ஆயிரம் வீரர்கள் இருப்பதாக இப்படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கார்த்திகேயன் தெரிவித்தார்.

### தாக்குத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து கடுமையான தாக்குதலை படையினர் சந்தித்து வருவாகவும் நிலக்கண்ணி வெடியினால் படையினர் நிலை குலைந்திருப்பதாகவும் கொழும்பில் இராணுவ தலைமைப்பீடம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க)

### காயமடைந்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யினர் படுகாயமடைந்த நிலையில் உள்ளனர் இவர்களை மீட்கப் படையினர் ஹெலி மூலம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் புலிகளால் முறியடிக்கப்பட்டதையடுத்தே அரசு பொதுஸ்தாபனங்களின் உதவி நாடியுள்ளதாம். (சி)

### ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருக்கின்றன.

'சண்டே ஐலண்ட்' பத்திரிகை இது குறித்து தெரிவித்திருப்பதாவது:

ஆனையிறவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கப்படக் கூடுமென இராணுவத்தினருக்கு ஏற்கனவே தகவல் கிடைத்தும்கூட இராணுவ உயர்பீடம் இதுகுறித்து எந்தவித முன்னேற்பாடும் மேற்கொள்ளவில்லை

விடுதலைப் புலிகளின் முற்றுகை பலமாகவுள்ளதாகவும் இது பற்றி இராணுவத்தலைமைப்பீடம் தகுந்த தகவல்களைப்பெற ஏன் தவறிவிட்டது என்பது குறித்து ஏன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லையென்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

'சண்டே ரைம்ஸ்' இது குறித்து தெரிவிக்கையில்; ஆனையிறவு முகாம் தாக்குதலை உடனடியாக ஆரம்பிக்கும்படி விடுதலைப்புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன் உடன் கட்டளையிடவில்லையென்றும் மாறுக கடந்த ஆறுமாதகாலமாக திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இதுவென்றும் தெரிவித்துள்ளது. (க)

### மணல் ஆறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பை அடுத்து அவர்கள் முகாம் திரும்பினர்.

இதையடுத்து நித்திகைக் குளம் முகாமிலிருந்து 9-45 வரை மணல் ஆற்றில் யுத்தம் நடைபெற்ற இடத்தை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

மணல் ஆறிலிருந்து மீண்டும் 300 க்கும் மேற்பட்ட படையினர் முன்னேற முற்பட்டபோது புலிகள் வழி மறித்து தாக்குதல் நடாத்தினர். மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது முகாமிலிருந்து இந்த இடத்தை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. பொம்மர், இருஹெலிகள், ஒருஅவ்ரோ ஆகியன காட்டுப் பகுதியில் பீப்பா குண்டு தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டன.

இம்மோதலில் 15 படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமுமடைந்தனர். புலிகள் பல ஆயுதங்களையும் கைப்பற்றினர். காயமடைந்த படைனர் அங்கிருந்து எடுத்துச்செல்ல ஹெலி ஒன்று மேற்கொண்ட சகல முயற்சிகளும் புலிகளின் கடும் தாக்குதலினால் முறியடிக்கப்பட்டது.

இதையடுத்து சுமார் 5-30 மணியளவில் படையினர் முகாம் திரும்பினர். (சி)

### சடலங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புலிகளின் உக்கிர தாக்குதலில் பெருமளவு படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்ட இரு படையினரின் சடலங்களும், ஒரு ஜி.பி.எம் ஜி.யும் ஒரு ரி-56-1, ரி-81 ரக துப்பாக்கியும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட இரு சடலங்களும் இன்று யாழ்ப்பாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. [சி]

## 8 ராணுவம் பலி

(கொழும்பு)

கட்டைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் 8 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. (மா)

### கருத்துக்கூற

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யூ. என். ஐ. செய்தி ஸ்தாபனத்துக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் இலங்கையின் வடக்கு கிழக்கு நிலைமையை பிரேமதாஸா அரசு கையாளும்விதம் குறித்து கேள்வி கேட்டபோதே அவர் அது சம்பந்தமாக எதுவித கருத்தும் கூற மறுத்துவிட்டார்.

இலங்கையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிடக்கூடிய வாய்ப்பு இல்லையென்றும், இது தொடர்பாக இலங்கை விடுக்கும் அழைப்பை இந்தியா ஏற்காது என்றும் திரு. ஜெயவர்த்தன தமது பேட்டியில் தெரிவித்தார்.

### சுதந்திரக்கட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிளவு ஏற்படவிருப்பதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

தற்போது கட்சியின் தலைவியாக இருக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கட்சியிலிருந்து ஒய்வு பெற விரும்பியதையடுத்தே இந்த பதவிப் போட்டி ஏற்பட்டிருக்கிறது.

கட்சியின் தலைமைப் பதவிக்கு திரு. அநுராபண்டாரநாயக்காவும், அவரது சகோதரி திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவும் போட்டியிடுவதற்கு முடிவு செய்திருப்பதையடுத்து சுதந்திரக்கட்சி பிளவுபடும் நிலை ஏற்பட்டுருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். [மா]

### வீரவணக்கம்

இம்மோதலில் வீரமரணமடைந்த போராளிகள் விபரம் வருமாறு:

கப்டன் நியூட்டன் (அ. செபமாலை மன்னர்), லெப். பிரதாப் (சண்முகம் முரளி மட்டக்களப்பு செங்கலடி), 2-வது லெப். செல்வம் (செ. சத்தியசீலன் மன்னர் அடம்பன் தாமரைக்குளம்) நிதி (காந்தமுத்து சிவகுமாரன் மட்டககளப்பு இலுப்பையடி சேனை).

வீரமரணமடைந்த வீர வேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணத்தைத் தெரிவிக்கின்றனர். (க)

### அதிர்ச்சித்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நோக்கி விடுதலைப்புலிகள் அதிர்ச்சியளிக்கக்கூடிய கடைசிக்கட்ட அதிரடித்தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

### ராணுவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல்களால் படையினர் நிலைகுலைந்து பலத்த இழப்புக்களுடன் முகாமுக்குத் திரும்பினர். (56)

### வீரவேங்கைகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தூர் மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டு பின் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் திரு. பரா, திரு. குகதாஸ் மாஸ்ரர், திரு. ரஞ்சன் மாஸ்ரர், திரு. தனபால், செல்வி ரூபலதா ஆகியோர் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றினர்.

வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு: அர்யுன்- சிவானந்தம்- நந்தகோபால், நீதிமன்ற வீதி, திருமலை. வியே- செல்லத்துரை சிற்றம்பலம்- தும்பன் கேணி ஈவிதிட்டம் பழுகாமம், மட்டக்களப்பு. லிலித்- வேல்முருகு விஜயகுமார் 3ம் கட்டை குச்சவெளி, திருமலை. கொலின்- சண்முகநாதன் காந்தி, பிள்ளையார் கோவிலடி மயிலிட்டி. நேரு- சாமமூர்த்தி குமரேசன்- புத்தூர் மேற்கு. சோபிகா- பராசக்தி கந்தசாமி கட்டுவிளான் ஏழாலை மேற்கு. [க]

### கட்டைக்காடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனர். புல்லாவெளிச்சந்தி வெற்றிலைக்கேணி கடற்கரையிலிருந்து சுமார் இரண்டரை மைல் தூ மாகும்.

நேற்று மாலை புல்லாவெளிச் சந்தியிலிருந்து மருதடிச் சந்தி நோக்கி சுமார் ஒன்றேகால் மைல் தூரம் சென்ற புலிகளின் அதிரடி அணி திடீரென மேற்கொண்ட உக்கிரத் தாக்குதலினால் மேற்படி படையணி இரண்டாசப் பிரிக்கப்பட்டு புல்லாவெளிச் சந்திப் பக்கமுள்ள நூற்றுக்கணக்கான படையினர் தற்போது புலிகளின் பூரண முற்றுகைக்குள் சிக்குண்டுள்ளனர். இவர்கள் மீது தொடர்ந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## வரிவிளம்பரம்


### காணவில்லை

ஏழாலை வடக்கு ஊரங்குனையைச் சேர்ந்தவரும் இடம்பெயர்ந்து ஏழாலை தெற்கு மயிலங்காட்டில் வசித்தவருமாகிய வீரசிங்கம் இராசையா (சடையர்) 15-7-91 திங்கட்கிழமை தொடக்கம் மனவிரக்தியால் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார்; இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு அறியத்தரவும். சு. சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), C/o, த. நாகராசா, மயிலங்காடு, ஏழாலை தெற்கு, சுன்னாகம். [எ-1451]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180386/81